# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் டில்லியிலுள்ள பைத்துல் ஹாதி பள்ளிவாசலில்
## 12.12.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

கடந்த இரு குத்பாக்களுக்கான உரையை நான் இந்தியாவில் நிகழ்த்தினேன். தென் இந்தியாவிலுள்ள கேரள மாநிலம் Calicut -ல் ஒரு குத்பா உரை நிகழ்த்தினேன். இரண்டாவது குத்பா உரையை டெல்லியில் நிகழ்த்தினேன். பிறகு சில சூழ்நிலைகள் காரணமாக எனது சுற்றுப்பயணத்தை சுருக்கிக் கொண்டு நான் திரும்பி இங்கு வந்து விட்டது பற்றி உங்களுக்குத் தெரியும்.

பொதுவாக நான் சுற்றுப்பயணத்திலிருந்து திரும்பும்போது அந்த சுற்றுப்பயணம் தொடர்பாகவும், சுற்றுப்பயணம் செய்த இடங்கள் தொடர்பாகவும், அங்குள்ள நிலைமைகள் தொடர்பாகவும் கூறுவது எனது வழக்கமாக இருந்து வருகிறது. இந்த நிலைமைகளைக் குறித்து கேட்பது உலகிலுள்ள எல்லா அஹ்மதிகளின் வழக்கமாக ஆகி விட்டது. அவர்களுக்கு இதில் விருப்பம் இருக்கின்றது. எந்த இடங்களுக்கு நான் சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றேனோ அங்குள்ளவர்களுக்கும் நான் அங்குள்ள நிலைமைகள் பற்றி கூற வேண்டும் என்ற விருப்பம் இருக்கின்றது. எங்களைப் பற்றியும் சிறிது கூறுங்கள் என்று அவர்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றார்கள். கேரளாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட சமயத்தில் Calicut -ல் நான் கொடுத்த குத்பாவிலேயே அந்த இடத்தின் முக்கியத்துவம், அங்குள்ள மக்களின் வரலாறு ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக எடுத்துக் கூறி விட்டேன். மேலும் அவர்களுக்கு அவர்களது பொறுப்புகள் தொடர்பாகவும் கவனமூட்டியுள்ளேன். அவர்களது மனத்தூய்மை, களங்கமற்ற நம்பிக்கை தொடர்பாகவும் நான் அந்த குத்பாவில் கூறி விட்டேன். ஆனால், எனது சுற்றுப்பயணம் தொடர்பாக மேலும் சில விபரங்களை சுருக்கமாக இப்போது எடுத்துரைப்பேன்.

கேரளா செல்வதற்கு முன்பே இதற்கு முன்னர் நாம் மதராஸ் என்று அழைக்கப்பட்ட சென்னை நகரத்திற்குச் சென்றோம். அங்கு சில மணி நேரங்கள்தான் எங்களால் தங்க முடிந்தது. ஆனால் அந்த சமயத்தில் லஜ்னாக்களின் மிக சுருக்கமான நல்ல Programme நடந்தது. அந்த நிகழ்ச்சியில் சுருக்கமாக நான் அவர்களது பொறுப்புகள் குறித்து அவர்களுக்கு கவனமூட்டினேன். பிறகு அங்குள்ள St. Thomas Mount -ல் நமது ஒரு புதிய பள்ளிவாசல் கட்டப்பட்டிருந்தது. அந்த பள்ளிவாசலையும் நான் திறந்து வைத்தேன். சென்னை ஜமாஅத் சில நூறுகளை எண்ணிக்கையாக கொண்டிருக்கும் ஒரு ஜமாஅத்தாகும். மிகச் சிறிய ஜமாஅத் என்றும் அதை கூற முடியாது. ஆனால், அல்லாஹ்வின் அருளால் மனத்தூய்மையிலும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதிலும் மிகவும் முன்னேற்றமடைந்துள்ள ஒரு ஜமாஅத்தாக அது இருக்கின்றது.

அல்லாஹ்வின் அருளால் M.T.A என்ற அருட்கொடையை அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். அது ஜமாஅத்தில் ஒரு ஒற்றுமையையும், கிலாஃபத்துடன் ஒரு நெருங்கிய தொடர்பையும் மிகவும் உறுதியான நிலையில் ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த பகுதி காதியானிலிருந்து 2000 மைல்கள் தூரத்தில் இருக்கின்றது. அங்குள்ள அஹ்மதிகளில் பலரும் இதுவரை காதியான் செல்லாதவர்களாக இருக்கிறார்கள். இந்த அனைவரது பார்வையிலிருந்தும் கிலாஃபத்தின் மீது அவர்கள் வைத்திருக்கும் பற்று, ஜமாஅத் அளவில் பேணப்படும் ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றின் வெளிப்பாடும், ஜமாஅத்தோடு அவர்களுக்கு இருக்கும் தொடர்பும் அதிகமாக தெரிய வருகிறது. அதற்கு ஒரு காரணம் இங்குள்ள பெரியவர்கள் ஜமாஅத்திற்கு வழங்கியுள்ள தர்பிய்யத் ஆகும். ஏனென்றால், இந்த பகுதியிலும் ஜமாஅத்தின் பல சான்றோர்கள் வாழ்ந்துள்ளார்கள்.

இரண்டாவது காரணம், M.T.A –ன் தாக்கம் நல்ல விளைவை இங்கு ஏற்படுத்தியிருக்கின்றது. அங்கு நஸம்கள் பாடப்பட்ட விதம் இதனை வெளிப்படுத்தியது. உலகில் ஒவ்வொரு இடத்திலும் நஸம்கள் பாடப்படும் முறை ஒன்றாக தெரிகிறது. ஆப்பிரிக்காவாக இருந்தாலும், ஆசியாவாக இருந்தாலும், ஐரோப்பாவாக இருந்தாலும் எல்லா இடங்களிலும் இந்த நிலையைப் பார்க்க முடிகின்றது. இந்த தொடர்பும் இந்த ஒற்றுமை உணர்வும் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே செல்கின்றது. நான் சென்னை பற்றி கூறும்போது பெரியவர்கள் வழங்கும் தர்பிய்யத் பற்றி குறிப்பிட்டிருந்தேன். சென்னை நகரத்தில் அல்லது அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அஹ்மதிய்யத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலேயே வந்து விட்டது. அங்குள்ள அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் 16 சஹாபாக்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த சஹாபாக்களின் சந்ததிகள் அங்கு இருக்கின்றார்கள். அந்த சஹாபாக்களின் தலைமுறையில் வந்தவர்கள் அங்கு இருக்கின்றார்கள். அவர்கள் அஹ்மதிய்யத்தில் நிலைத்து நிற்கின்றார்கள். இவர்களைத் தவிர புதிய அஹ்மதிகளும் அங்கு இருக்கின்றார்கள்.

St. Thomas Mount –ல் கட்டப்பட்ட பள்ளிவாசலைப் பற்றி நான் கூறினேன். இந்த இடத்திற்கும் ஒரு சுருக்கமான வரலாறு இருக்கின்றது. இங்குள்ள கிறிஸ்தவத்தின் வரலாற்றின்படி தோமா (தாமஸ்) என்ற இந்த ஹவாரி அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் இந்த சீடர் கி.மு. 52 ஆம் ஆண்டில் கேரளா வழியாக சென்னை வந்துள்ளார். இங்கு ஒரு சிறிய மலை இருக்கின்றது. அதையே St. Thomas Mount என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. அங்கு ஒரு Church –ம் இருக்கின்றது. தமது இறுதி நாட்களில் 15 அல்லது 16 வருடம் இந்த ஹவாரி வாழ்ந்துள்ளார். இங்கு ஒரு எதிரி அவரை கொலை செய்து விட்டார். இங்கேயே முதலில் அவர் அடக்கம் செய்யப்பட்டார். பிறகு பின்னர் அவரது உடல் வாடிகன் நகரத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. எவ்வாறிருப்பினும், இஸ்ரவேலர்களிலிருந்தும் காணாமற்போன ஆடுகளை அதாவது இஸ்ரவேல் கோத்திரத்தைச் சார்ந்தவர்களை தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்கு கிறிஸ்தவத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதே தாமஸ் ஹவாரி அவர்கள் இப்பகுதியில் வருகை தந்ததின் நோக்கமாக இருந்திருக்கிறது.

ஹஸ்ரத் தாமஸ் ஹவாரி அவர்கள் சிலுவை சம்பவத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடனேயே பயணம் செய்துள்ளார்கள். இவர்களைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் எழுதியிருக்கின்றார்கள்.

பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலில் அதன் ஐந்தாவது பாகத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த மேற்கோள் இருக்கின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஹவாரியீன்களில் சிலர் சென்னை வந்துள்ளார்கள் என்பதை கிறிஸ்தவர்களே ஏற்றுக் கொள்கின்றார்கள். தாமஸ் ஹவாரி அவர்கள் மதராஸிற்கு வந்தார்கள் என்பதும் இன்று வரை அவர்களது நினைவாக அங்கு ஒரு மாநாடு ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருவதும், அது திருவிழா போன்று நடத்தப்படுவதும் எவரது பார்வையிலிருந்தும் மறைவாக இல்லை.

இதைத் தவிர மல்ஃபூஸாத்திலும் தாமஸ் ஹாவாரி அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த சமயத்தில் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களுடன் மட்டும் சென்றார்களோ அவ்வாறே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் ஹிஜ்ரத் செய்த சமயத்தில் தாமஸ் ஹவாரியுடன் மட்டுமே சென்றார்கள்.

மக்களுக்கு அதிகமாக இதுபற்றி தெரிந்து விடக் கூடாது என்பதற்காக இவ்வாறு முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டுள்ளார்கள். மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் இந்த பயணம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு பயணம் மேற்கொண்டவாறு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறுதியில் காஷ்மீருக்கு வந்து சேர்ந்தார்கள்.

கேரளாவில் யூதர்களின் வரலாறு பற்றியும் சிறிது கூறுகின்றேன். இங்கு யூதர்கள் நீண்ட காலத்திற்கு முன்பே வந்து குடியேறியிருந்தார்கள். அங்கு தப்லீக் செய்வதற்காக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஹவாரி அவர்கள் இங்கு வரவேண்டியது கட்டாயமானதாக இருந்தது. அதன் மூலமாக தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கொண்டு வந்த தூதுச் செய்தியை அறியாதவர்களாக இந்த யூத கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் இருந்துவிடக் கூடாது என்பது தாமஸ் ஹவாரி அவர்களின் வருகையின் நோக்கமாக இருந்தது.

எவ்வாறிருப்பினும் நான் கூற வந்ததன் நோக்கம் இந்த சென்னை நகரம் மிக பழைய மார்க்க வரலாறை தன்னகத்தே கொண்டிருக்கின்றது. இப்போது அல்லாஹ்வின் அருளால் முஹம்மதிய மஸீஹின் மூலமும் அவர்களது சஹாபாக்கள் மூலமும் இந்த பகுதியில் அஹ்மதிய்யத் நிலைநாட்டப்பட்டு ஜமாஅத் அங்கு முன்னேறி வருகின்றது. அடுத்த தலைமுறையும்கூட ஈமானிலும் மனத்தூய்மையிலும் முன்னேறி வருகிறது. இந்த வருடம் இதே பகுதியில் பள்ளிவாசலைக் கட்டுவதற்கான தவ்ஃபீக்கும் ஜமாஅத்திற்கு கிடைத்துள்ளது. எங்கு மூஸவிய மஸீஹான ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஹவாரி தான் தங்குவதற்கான இடத்தை அமைத்துக் கொண்டார்களோ அதே இடத்தில் நாம் பள்ளிவாசல் கட்டுவதற்கான தவ்ஃபீக் கிடைத்துள்ளது. St. Thomas Mount –ல் மிகப்பெரிய Church இருக்கின்றது. கிறிஸ்தவம் இங்கு பரவியிருக்கின்றது. இந்த மஸ்ஜிதின் அருளால் முன்பை விட அதிகமாக முஹம்மதிய்ய மஸீஹின் தூதுச் செய்தியை இந்த பகுதியில் பரப்புவதற்கான தவ்ஃபீகை அல்லாஹ் அஹ்மதிகளுக்கு வழங்கியிருக்கின்றான். இந்த தவ்ஃபீக் இவர்களுக்கு கிடைத்துக் கொண்டேயிருக்கும்படி அல்லாஹ் செய்வானாக. ஏனென்றால், இப்போது இந்த பொய்யான கொள்கையை விட்டு விட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைகளாக மாறுவதில்தான் இந்த மக்களின் இரட்சிப்பு அடங்கியிருக்கின்றது. ஏக இறைவன் முன்னால் குனிவதில்தான் இந்த இரட்சிப்பு அடங்கியிருக்கின்றது. ஆக, இதுதான் சென்னை தொடர்பான சுருக்கமான விபரங்களாகும்.

பிறகு இங்கிருந்து நான் கேரளாவிலுள்ள Calicut நகருக்கு சென்றேன். ஹஸ்ரத் தாமஸ் அவர்கள் முதலாவதாக வந்த நகரம் இதுவாகும். ஏனென்றால், இங்கு யூதர்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் குடியேறியிருந்தார்கள். இந்த மக்கள் மலபாரி யூதர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் ஸுலைமான் (அலை) அவர்களின் காலத்திலிருந்தே வியாபார குழுக்கள் இங்கு வந்து கொண்டிருந்தார்கள் என்று இவர்களது வரலாறு கூறுகின்றது. அவர்களுடன் யூத மதமும் வந்திருக்கும். தாமஸ் ஹவாரி இங்கு வந்த போது தமது வாழ்க்கையின் பெரும்பகுதியை இங்கேயே கழித்தார்கள் மேலும் யூதர்களுக்கு கிறிஸ்தவத்தின் தூதுச் செய்தியை அவர்கள் எட்ட வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பெரும்பாலார் இந்த தூதுச் செய்தியை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் தாமஸ் அவர்கள் மூலம் கிறிஸ்தவர்களாக மாறிய இந்த யூதர்கள் இந்த பகுதியில் நஸ்ரானி என்று அழைக்கப்படுகின்றனர். நஸ்ரானி கிறிஸ்தவர்கள் என்று இவர்கள் அழைக்கப்படுகின்றனர். இவர்களில் ஒரு பெரும் எண்ணிக்கை ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்பவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இங்கு இந்துக்களின் எண்ணிக்கையும் மிக அதிகமாக இருக்கின்றது. முஸ்லிம்களும் பெரும் எண்ணிக்கையில் இங்கு இருக்கின்றார்கள். ஆனால், இந்தப் பகுதியில் அல்லாஹ்வின் மிகப்பெரும் அருள் இருக்கின்றது. அதாவது இங்குள்ள மக்கள் தங்களுக்கிடையில் ஒற்றுமையாக ஒருவர் மற்றவருடன் இணைந்து வாழ்கின்றார்கள். நாட்டின் ஏதாவதொரு பகுதியில் மதங்கள் ரீதியான குழப்பங்கள் உருவாகினாலும் கேரளாவில் உள்ளவர்களுக்கு அத்துடன் எந்த தொடர்பும் இருப்பதில்லை. அவர்களுக்கு இதில் எவ்வித ஆர்வமும் இருக்காது. ஒன்றுமே நடைபெறாதது போன்ற நிலைதான் இருக்கும்.

எனக்கு நினைவு இருக்கின்றது. கானாவில் கேரளாவைச் சார்ந்த எனது நண்பர் ஒருவர் இருந்தார். நான் அலுவலகத்திற்கு சென்ற சமயத்தில் அவர் அங்கு இருந்தார். அப்போது கானாவைச் சார்ந்த ஒரு நபர் அங்கு வந்தார். அவர் என்னைப் பார்த்து நீங்கள் இந்தியரா? என்று கேட்டதற்கு இல்லை. நான் பாகிஸ்தானைச் சார்ந்தவன் என்று நான் கூறினேன். அப்போது கானாவைச் சார்ந்த அந்த நபர் பாகிஸ்தானைச் சார்ந்தவருக்கும், இந்தியாவைச் சார்ந்தவருக்கும் என்ன வித்தியாசம் இருக்கின்றது? என்று கேட்டார். நான் அதற்கு பதில் கூறுவதற்கு முன்பே கேரளாவைச் சார்ந்த அந்த கிறிஸ்தவப் பொறியாளர் அவரைப் பார்த்து எங்களுக்கிடையில் எந்த வித்தியாசமும் இல்லை. புவியியல் ரீதியாக இருக்கும் எல்லைக் கோடுகளின் வித்தியாசம் மட்டும்தான் இருக்கின்றது என்று கூறினார். அல்லது எங்களுக்கிடையில் சில வேறுபாடுகளை தலைவர்கள் ஏற்படுத்தி விட்டார்கள் என்றும் கூறினார். எவ்வாறிருப்பினும், இந்த கேரள மக்களின் சிந்தனை எப்போது Positive ஆக இருக்கின்றது. அவர்கள் எந்த வித்தியாசத்தையும் தங்களுக்கிடையில் காட்டுவதை விரும்புவதேயில்லை. சகிப்புத்தன்மையும் அவர்களிடம் அதிகமாக இருக்கின்றது. அரபு நாட்டிலுள்ள வியாபார குழுக்கள் இங்கு வந்த சமயத்தில் இந்தப் பகுதியில் இஸ்லாமும் அவர்கள் மூலமாக வந்தது. ஏனென்றால், வியாபாரக் குழு இங்கு வந்த சமயத்தில் ஹஸ்ரத் மாலிக் பின் தீனார் அவர்கள் நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் காலத்திலேயே அந்த வியாபாரக் குழுவுடன் வந்ததாக இங்குள்ள வரலாறு கூறுகிறது. ஹஸ்ரத் மாலிக் பின் தீனார் அவர்களோடு அரபு நாட்டைச் சார்ந்த 12 வியாபாரிகள் வந்தார்கள். அந்தக் காலத்தில் அங்குள்ள **பெரவ்மல் என்ற ராஜா** இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். முதலில் இஸ்லாத்தைப் பற்றிய தகவல்களை அவர் பெற்றார். பிறகு இஸ்லாத்தை உண்மை என்று அறிந்து அதை ஏற்றுக் கொண்டார். பிறகு இதே வியாபாரக் குழுவுடன் அவர் மக்காவும் சென்றார். இந்த ராஜா இஸ்லாத்தின் அழகிய போதனைகளையும் அதன் அற்புதங்களையும் கண்டு முஸ்லிம் ஆனார். இந்தப் பகுதியில் ஒரு ராஜா இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். பெயர்களில் சில வித்தியாசங்கள் இருக்கலாம். அந்த காலத்திலுள்ள பெயர்களுக்கும் இப்போது கூறப்பட்டு வரும் பெயர்களுக்குமிடையில் வித்தியாசம் இருக்கலாம். எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இப்பகுதியின் ராஜா முஸ்லிமாகி விட்டார் என்று குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். பிறகு இந்தப் பகுதியில் இஸ்லாம் பரவியது. கேரளத்திலுள்ள ஒரு அஹ்மதி குடும்பத்தினர் நாங்களும் அதே ராஜாவின் சந்ததிகளிலிருந்து வந்தவர்கள் என்று என்னிடம் கூறினார்கள். அந்த ராஜாவின் சில நன்மைகள் எஞ்சியிருக்கின்றது. எதிர்கால சந்ததிகளுக்காக அந்த ராஜாவின் துஆக்களும் நிச்சயமாக பயன் அளித்திருக்கும். முஸ்லிமாகிவிட்ட அந்த ராஜாவின் எதிர்கால தலைமுறையில் வந்த சிலருக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை இறைவன் வழங்கியுள்ளான். நான் ஏற்கனவே கூறியது போன்று இந்தப் பகுதியில் ஏறக்குறைய 100 சதவிகிதம் மக்கள் படிப்பறிவுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், மற்ற மாநிலங்களில் படிப்பறிவுள்ளவர்களின் சதவிகிதம் மிகவும் குறைவாக இருக்கின்றது. முஸ்லிம்களில் அறவே படிக்காதவர்கள்தான் இருக்கின்றார்கள். ஆனால், இந்தப் பகுதியில் 90 சதவிகித முஸ்லிம்கள் படிப்பறிவுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இந்தப் பகுதியானது இந்த மாநிலத்திலுள்ள பல்வேறு மதங்களைச் சார்ந்திருப்பவர்களைத் தன்னகத்தே ஈத்துக் கொண்டிருக்கின்றது. ஒளிமயமிக்க சிந்தனைத் திறனுள்ள மக்கள் இங்கு இருக்கின்றார்கள். சகிப்புத்தன்மையும் இவர்களிடம் அதிகமாக இருக்கின்றது. அஹ்மதிய்யத்தை தப்லீக் செய்வதில், தொடர்ந்து செய்யப்பட்டு வரும் சரியான முயற்சிகள் இருந்தால் அஹ்மதிய்யத்திற்காக இது மிகவும் செழிப்பான நிலமாகி விடும் என்று நான் நம்புகின்றேன். உலகின் மற்றப் பகுதிகளில் முஸ்லிம் அமைப்புகள் வெறுப்புணர்வையும், தீவிரவாதத்தை விரும்புவதையும் தங்களது நடைமுறையாக ஆக்கிக்கொண்டது போலவே இங்கும் இதே போன்ற முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால், பொதுவாக மக்கள் இதற்கு நேர்மாற்றமாக செயல்படுபவர்களாக இருக்கின்றார்கள். இந்த விஷயத்தை முடிவுக்கு கொண்டு வர அவர்கள் விரும்புகின்றார்கள். ஏனென்றால், இங்கு சில பிரிவைச் சார்ந்தவர்களைச் சந்திக்க நேர்ந்தது நான் அங்கு செல்லும் சமயத்தில் எதிர்மறை நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்குள்ள சாத்தியம் இருந்தது. ஆனால்,

என்னிடம் கூறப்பட்டது என்னவென்றால் அல்லாஹ் மிகவும் அருள் செய்தான். நான் அங்கு செல்வதற்கு முன்னரே இப்படிப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள் பற்றிய அடையாளங்கள் தெளிவாகத் தெரிய வந்தது. அவர்கள் குழப்பங்கள் விளைவிக்க முயற்சிகள் செய்வதும் தீவிரவாதிகளாக இருப்பதும் தெரிய வந்தது. அரசாங்கம் இப்படிப்பட்டவர்களை கைது செய்து சிறையில் அடைத்தது.

அல்லாஹ் மிகவும் அருள் செய்தான். நமது சுற்றுப் பயணத்தின்போது எந்த ஒரு திசையிலிருந்தும் நம்மை எதிர்க்கும் குரல்கள் எழவில்லை. மாறாக, அங்குள்ள Journalist ஆன ஒரு அஹ்மதி நமது எதிரிகளாக இருக்கும் முஸ்லிம் பிரிவுகள் மற்றும் முஸ்லிம் அமைப்புகளின் சார்பாக வெளிவரும் பத்திரிகைகளில்கூட மிகவும் கண்ணியமான முறையில் நான் சென்ற செய்தியை வெளியிட்டிருப்பதாக எனக்கு கடிதம் எழுதியுள்ளார்.

நமது ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றது. நான் ஒரு அஹ்மதி நண்பரின் வீட்டில் தங்கியிருந்தேன். அங்கிருந்து பள்ளிவாசலுக்கு 20 நிமிடங்களில் சென்று விடலாம். நமது பள்ளிவாசலும் சரியாக நகரத்தின் நடுவில் அமைந்திருக்கின்றது. மற்ற விருந்தினர்கள் கலந்து கொண்ட நமது Reception –லும் கூட ஒரு அரசியல் தலைவர் என்னிடம் உங்களது பள்ளிவாசல் நகரத்தின் இதயத்தில் (Heart of the City) அமைந்துள்ளது. மிக முக்கியமான இடத்தில் இது அமைந்துள்ளது என்று கூறினார். எவ்வாறு நகரத்தின் இதயத்தில் இந்த பள்ளிவாசல் அமைந்துள்ளதோ அவ்வாறே இங்கிருந்து அன்பின் தூதுச் செய்தி பரவி அது உள்ளங்களை வெற்றி கொள்ளும். இன்ஷா அல்லாஹ். அரசாங்கமும் அங்கு நமக்கு போதுமான ஒத்துழைப்பை தந்தது. மாநில அரசு ஒரு அஹ்மதி Police Officer –ஐ பாதுகாப்பிற்காக வழங்கியது. அவர் தனது குழுவினருடன் அங்கு வந்திருந்தார். பொதுவாக மக்கள் நல்கிய ஒத்துழைப்பும் நல்ல விதத்தில் இருந்தது. ஒரு நாளில் இரண்டு முறை பள்ளிவாசலுக்கு சென்ற சமயத்திலும் கூட மக்கள் சிரமத்திற்கு ஆளானார்கள் என்றோ, அதனால் Traffic –ற்கு எந்த தடையையும் அவர்கள் ஏற்படுத்தினார்கள் என்றோ எதுவும் நம்மால் கூற முடியாது. மாறாக, தாமாகவே முன் வந்து சில சமயங்களில் Traffic –ஐ நிறுத்தி விட்டு மிகவும் ஆர்வத்துடன் அவர்கள் நமக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தார்கள். எனவே, இந்த இடத்திலிருந்தும் சரியான பலனைப் பெற அஹ்மதிகள் முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கூறுகின்றேன்.

Calicut –ல், Calicut மற்றும் அதன் அருகாமையிலுள்ள ஜமாஅத்துகளைச் சார்ந்த அஹ்மதிகளுடன் சந்திப்பு நடந்தது. இந்தப் பகுதியைச் சார்ந்த எவ்வளவு அஹ்மதிகள் அங்கு வந்தார்களோ அவர்கள் ஆயிரக்கணக்கில் இருந்தும் அவர்கள் எல்லாரையும் சந்திக்கும் வாய்ப்பு அல்லாஹ்வின் அருளால் எனக்கு கிடைத்தது. இந்த சந்திப்பின்போதும் அவர்கள் வெளிப்படுத்திய அந்த தொடர்பையும், களங்கமற்ற அந்த பற்றையும் எல்லா ஆண்களிடமும், பெண்களிடமும், குழந்தைகளிடம் என்னால் பார்க்க முடிந்தது. அது மிகவும் வியப்பிற்குரியதாக இருந்தது. மனத்தூய்மையிலும், களங்கமற்ற பற்றிலும் இவர்கள் மிகவும் முன்னேறியுள்ளார்கள். இவர்களில் பலரும் கடந்த சில வருடங்களுக்கு முன்னர்தான் பைஅத் செய்து ஜமாஅத்தில் சேர்ந்துள்ளார்கள். ஆனால், மனத்தூய்மையிலும் ஆழ்ந்த பற்றிலும் இவர்கள் மிகவும் முன்னேறியுள்ளார்கள். இவர்கள் ஜமாஅத் அமைப்புடன் எந்த அளவு ஒன்றிவிட்டார்கள் என்றால் இவர்கள் பழைய அஹ்மதிகளா? அல்லது புதிய அஹ்மதிகளா? என்பதை தெரிந்து கொள்ள முடியவில்லை. தொண்டாற்றுவதில் முன்னணியில் நிற்கின்றார்கள். இவர்களில் பலரிடமும் முக்கியமான ஜமாஅத் பொறுப்புகள் இருக்கின்றன. மிகச் சிறந்த முறையில் இவர்கள் தொண்டு செய்து வருகின்றார்கள். ஜமாஅத்தின் அமைப்பை புரிந்து கொள்வதற்கும் தங்களது தரத்தை சிறந்ததாக ஆக்கிக் கொள்வதற்கும் மீண்டும் மீண்டும் அவர்கள் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். தங்கள் அறிவை மேலும் பெருக்குவதற்கு அவர்கள் முயற்சிகளை செய்து கொண்டிருந்தார்கள். அதன் மூலமாக ஜமாஅத்தின் பணிகளைச் சரியான திசையில் கொண்டு செல்ல அவர்கள் முயற்சி செய்கின்றார்கள். இப்படிப்பட்ட புதிய அஹ்மதிகள் எல்லா இடத்திலும் இருக்க வேண்டும். வெறும் பைஅத்துகள் செய்ய வைப்பதால் எந்தப் பலனும் ஏற்படாது. எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வது எனது நோக்கமல்ல என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட

மஸீஹ் (அலை) அவர்களும் கூறியுள்ளார்கள். தக்வாவில் முன்னேறுபவர்கள்தான் நமக்கு தேவை. எனவே, உலகிலுள்ள ஏனைய ஜமாஅத்துகளுக்கும் இந்தியாவின் மற்ற பகுதியிலுள்ள ஜமாஅத்துகளுக்கும் நான் கூறிக்கொள்வது ஜமாஅத் வாழ்விற்கு நற்பலனை தரக்கூடிய பழங்களாக இருக்கும் விதத்தில் பைஅத்துகள் பழுத்த பழங்களாகத் திகழ வேண்டும். அது நமக்கு ஆரோக்கியத்தை வழங்கக்கூடியதாக இருக்க வேண்டும். அதன் விதையிலிருந்தும் பிறகு எப்படிப்பட்ட செடிகொடிகள் வெளிப்பட வேண்டுமென்றால் எல்லா வகையிலும் அது கனிகள் நிறைந்த மரமாக மாறிவிட வேண்டும். காணாமற்போன பைஅத்துகளைத் தேடுங்கள் என்று நான் ஜமாஅத்திடம் கூறும்போது அதில் இருக்கும் இன்னொரு தூதுச் செய்தி என்னவென்றால் தர்பிய்யத்திலுள்ள குறைபாட்டின் விளைவாக முற்றிலும் இல்லாமற் போகின்ற பைஅத்துகளை வாங்காதீர்கள். முழுக்க முழுக்க சுயநலத்திற்காக மட்டும் இந்த பைஅத் இருக்கக்கூடாது. இந்த பைஅத்துகளை நாம் பறவைகளுக்கு ஒப்பிட்டு உதாரணமாக கூறினால் பிறகு அந்த பறவைகள் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்றால் அதைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்.

நீர் அந்தப் பறவைகளை நன்றாக பழக்கப்படுத்திக் கொள்வீராக. பிறகு அவறறை உமது பக்கம் அழைப்பீராக. அவை விரைவாக உம்மிடம் வந்து சேரும்.

ஜமாஅத்தின் பணிக்காக எவ்வித காரணமும் கூறாமல் தன்னை அர்ப்பணிக்கின்ற அஹ்மதிகள்தான் தேவை. அவர்கள் ஜமாஅத்தில் இணைந்ததும் அதன் அமைப்போடு ஒன்றிவிட வேண்டும். இறைவன் பக்கம் மக்களை அழைப்பவர்களும் தப்லீக் செய்யக்கூடியவர்களும் சுயமாக தங்களது நஃப்ஸின் விருப்பங்களிலிருந்தும் விடுபட்டவாறு தப்லீக் செய்யாதவரை இது நடக்க முடியாது.

**அஸ்லுஹா ஸாபிதுன் வ ஃபர்ஹீஹா ஃபிஸ்ஸமாயீ** – இவர்களது ஈமானின் வேர் மிகவும் வலுவாக நிலைநாட்டப்பட்டுள்ளது. அதன் கிளைகள் வானத்தின் பக்கம் சென்று கொண்டிருக்கின்றது என்ற உதாரணம் இவர்களுக்கு பொருந்த வேண்டும். உலகத்தைப் பற்றிய எந்த அச்சமும் இவர்களது உள்ளத்தில் இருக்கக் கூடாது. எந்தப் பணியும் பிறருக்கு காட்டுவதற்காக இருக்கக் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இருக்க வேண்டும். இறைவன் பக்கம் மக்களை அழைப்பவர்கள் இவ்வாறு முயற்சிகளை செய்து வந்தால்தான் ஜமாஅத்தில் புதிதாக இணைபவர்களும் ஜமாஅத் அமைப்புடன் சரியாக ஒன்றிவிட முடியும். இது நடக்கவில்லையென்றால் நான் இதற்கு முன் பலமுறை கூறியது போன்றே சில பைஅத்துகள் பற்றி நமக்கு தெரிந்து கொள்ளவே முடியவில்லை. இதைப் பற்றி வேறு ஒரு சமயத்தில் நான் எடுத்துக் கூறுவேன்.

தென்னிந்தியாவில் புதிதாக ஜமாஅத்தில் இணைந்தவர்களும் தியாகங்களில் பங்கு பெறுபவர்களாக இருப்பதை என்னால் பார்க்க முடிந்தது. மிகச் சிறந்த நல்லுதாரணங்களை அவர்கள் நிலைநாட்டியுள்ளார்கள். தியாகங்களில் பொருள் தியாகமும் உட்படும். நகரத்தின் இதயத்தில் இருக்கின்ற இந்த பள்ளிவாசல் பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன். மிகவும் விலை மதிப்புள்ள இடமாக இது இருக்கின்றது. இதற்கு அருகிலேயே ஒரு மிகப்பெரிய Plot இருந்தது. அது பல கோடி ரூபாய்க்கு விற்பனையாகக் கூடியதாக இருக்கின்றது. அங்குள்ள ஜமாஅத் முதலில் இதை வாங்க தலைமையகத்திடம் விண்ணப்பித்தது. உங்களது பொருளாதார வசதியைக் கொண்டு இதை நீங்கள் வாங்க வேண்டும் என்று நான் கூறி விட்டேன். அவர்கள் இதுபற்றி சிந்தனை செய்து கொண்டிருந்தார்கள். நான் அங்கு சென்றதும் அவர்களிடம் ஒரு புத்துணர்வும் ஒரு புது வேகமும் பிறந்தது. அதை வாங்க அவர்கள் உறுதியான எண்ணம் கொண்டவர்களாக ஆகிவிட்டார்கள். அதற்காக போதுமான அளவில் அவர்கள் பணத்தையும் ஒன்றுதிரட்டினார்கள். முதலில் இதை வாங்குவது எங்களுக்கு கடினமாகத் தெரிந்தது. ஆனால், இதனை இனி நாங்கள் எங்களது பொருளாதார வசதியின் மூலமாகவே வாங்கி விடுவோம் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் ஒரு அஹ்மதிக்கு அந்த Plot –ல் ஒரு பெரும்பகுதி இருந்தது. அவர் நான் இதற்கு எந்த தொகையையும் ஜமாஅத்திடமிருந்து பெறமாட்டேன் என்று கூறி விட்டார். இவ்வாறு இன்னும் பலரும் இதற்காக பொருள் தியாகம் செய்வதாக வாக்குறுதி தந்துள்ளார்கள். அங்கு

நின்றவாறே அவர்களிடம் சில மணித்துளிகள் நான் பேசிக் கொண்டிருந்த சமயத்திலேயே ஜமாஅத்தில் வசதிபடைத்த சகோதரர்கள் அந்த Plot -ற்குரிய விலையைக் கொடுத்து அதை வாங்கி விடுவதாக வாக்குறுதி தந்துள்ளார்கள். எனவே, தியாகத்திலும் மிகவும் முன்னேறிச் செல்கின்ற மக்களாக இவர்கள் இருக்கின்றார்கள். அல்லாஹ் பழைய அஹ்மதிகளுக்கும் புதிய அஹ்மதிகளுக்கும் அவர்கள் உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பவர்களாக ஆகும் தவ்ஃபீகை வழங்குவானாக. இந்த அழகிய போதனையை நடைமுறைப்படுத்தி உண்மையான தியாகத்தின் ஆன்மாவை புரியக் கூடியவர்களாக அவர்களை ஆக்குவானாக.

Calicut -ல் லஜ்னாவின் ஒரு சிறிய இஜ்திமாவும் நடந்தது. குறைந்தபட்சம் ஏறக்குறைய 4,000 நாஸிராத் மற்றும் லஜ்னா இதில் கலந்து கொண்டனர். U.K.-ன் லஜ்னா இஜ்திமாவை விட இந்த எண்ணிக்கை அதிகமாக எனக்கு தெரிந்தது. அல்லாஹ்வின் அருளால் இதற்கு சிறந்த நல் விளைவும் வெளிப்பட்டது. ஒவ்வொரு பெண் மற்றும் சிறுமியின் முகத்தில் தங்களது பணிகளைச் செய்வதில் ஒரு புதிய உறுதியையும் ஒரு புதிய வேகத்தையும் பார்க்க முடிந்தது. அவர்கள் என்னிடம் கூறியதைப் போன்றே அவர்கள்தமது Programme -களுக்கு பல மடங்கு முன்னேற்றத்தை அளிப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். இந்தியாவிலுள்ள முதல் அணியிலுள்ள லஜ்னா அமைப்புகளில் கேரளாவிலுள்ள லஜ்னா அமைப்பும் இருந்து வருகிறது. ஆனால், இப்போது எட்டிக் குதித்தவாறு இந்த மக்கள் முன்னேறிச் செல்வார்கள் என்று நான் கருதுகின்றேன். இந்தியாவிலுள்ள ஏனைய இடங்களிலுள்ள லஜ்னா அமைப்பைச் சார்ந்த பெண்கள் நான் கூறும் விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த விஷயங்களைக் கேட்டு அவர்களது உள்ளங்களிலும் ஒரு வேகம் உருவாகும்படி அல்லாஹ் செய்வானாக. அங்கிருந்து M.T.A மூலம் ஒளிபரப்பு செய்யப்பட்ட ஜுமுஆ குத்பாவை உங்களில் பெரும்பாலார் கேட்டிருப்பீர்கள். அந்த ஜுமுஆவில் கலந்து கொள்ள Calicut -ற்கு அருகாமையிலுள்ள ஜமாஅத்துகளிலிருந்து ஆயிரக்கணக்கான அஹ்மதிகள் வந்திருந்தார்கள். அங்கு ஒரு Hotel -ல் ஜமாஅத் ஒரு Reception -ற்கான ஏற்பாட்டையும் செய்திருந்தது. அங்கு பெரும் எண்ணிக்கையில் அரசு அதிகாரிகளும் படித்தவர்களும் வந்திருந்தார்கள். நகரத்தின் மேயரும் அங்கு வந்திருந்தார். அவர்கள் ஜமாஅத்தைப் பற்றியும் இஸ்லாத்தின் அழகிய போதனைகள் பற்றியும் மிகவும் சிறந்த முறையில் தங்கள் கருத்துக்களைக் கூறினார்கள். படித்தவர்கள் மத்தியில் இஸ்லாத்தின் தூதுச்செய்தி நல்ல முறையில் சென்று சேர்வதோடு இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மூலமாக கிடைக்கின்ற இன்னொரு நற்பலன் என்னவென்றால் பத்திரிகைகள் நல்ல முறையில் நமது நிகழ்ச்சிகளை Coverage செய்து மிகவும் விரிவான நிலையில் பல துறையைச் சார்ந்தவர்களுக்கும் இஸ்லாத்தின் அழகிய போதனையை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாக எட்ட வைக்கின்றது. அதன் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் தொடர்பாகவும் மக்களுக்கு தெரிய வருகிறது. Calicut-ல் மலையாள மொழியில் வெளிவரும் மிகப்பெரும் பத்திரிகையான மாத்ருபூமி -யின் Chief Editor Gopala Krishnan ஒரு இந்து சகோதரர் ஆவார். அவர் நான் கூறியவற்றைக் கேட்டதுடன் அதனை தனது பத்திரிகையிலும் வெளியிட்டார். அந்த பத்திரிகையைப் படிப்பவர்களின் எண்ணிக்கை ஒன்றரை கோடியை விட அதிகமாக இருக்கின்றது. உலகம், மார்க்கம் தொடர்பாக பல கேள்விகளையும் அவர் என்னிடம் கேட்டார். அவருக்கு நமது கருத்துக்கள் நல்லெண்ணத்தை உருவாக்கியது. ஆனால், சுதந்திரமான சிந்தனையுடையவர்களாக இவர்கள் இருந்தாலும் எல்லா நல்ல விஷயங்களையும் தனது எல்லைக்குள் மட்டும் வைத்திருக்கவே இவர்கள் விரும்புகின்றார்கள். நம்மிடம் மட்டும்தான் நல்லவை உள்ளன என்று அவர்கள் கருதுகின்றார்கள். திருக்குர்ஆனின் மொழியாக்கத்தையும் இவர் படித்துள்ளார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி தொடர்பாக நமது சகோதரர் இந்த பத்திரிகையில் எழுதும் செய்தியையும் இவர் படித்துள்ளார். ஆனால், எல்லா விஷயங்களையும் கேட்ட பிறகு இறுதியில் மிகவும் நளினமான பானியில் என்னைப் பார்த்து உங்களது விஷயங்களைக் கேட்ட பிறகு நீங்கள் காந்திஜி அவர்களின் தாக்கத்தின் கீழ் அதிகம் இருக்கின்றீர்கள் என்பது தெரிய வருகிறது என்று கூறினார். நான் உடனடியாக ஒருபோதும் காந்திஜியின் எந்த தாக்கமும் என்னிடம்

ஏற்படவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறக்கப்பட்ட திருக்குர்ஆனின் போதனைகளின் தாக்கம்தான் என்னிடம் ஏற்பட்டுள்ளது. அதன் ஒளியில்தான் இந்த எல்லா விஷயங்கள் பற்றியும் நான் உங்களிடம் பேசினேன் என்று நான் அவரிடம் கூறினேன். ஒவ்வொரு நல்ல விஷயத்தின் Credit -ம் தனக்கு கிடைக்க வேண்டும் என்பதே சிலரது பழக்கமாக இருக்கிறது. மிக நல்ல மகிழ்ச்சியான சூழ்நிலையில் அவருடன் பல விஷயங்கள் பேசப்பட்டது. இந்த விஷயங்கள் அனைத்தையும் அவர் தமது பத்திரிகையில் எழுதியிருப்பது அவரது கண்ணியத்தை எடுத்துரைக்கின்றது. பிறகு Calicut -லிருந்து இன்னொரு நகரமான கொச்சினுக்கு நாங்கள் சென்றோம். இங்கும் பெரிய ஜமாஅத் இருக்கின்றது. அருகாமையிலுள்ள சிறிய ஜமாஅத்துகளைச் சார்ந்தவர்களும் அங்கு ஒன்றுகூடி விட்டார்கள். இங்கு கட்டப்பட்ட புதிய பள்ளிவாசலை நான் திறந்து வைத்தேன். இதைத் தவிர இன்னும் 3 அல்லது 4 பள்ளிவாசலை நான் திறந்து வைக்க வேண்டியிருந்தது. அந்த இடங்களுக்கு நான் செல்ல முடியாமல் இருந்ததால் அந்த பள்ளிவாசல்களின் பெயரைக் குறிப்பிட்டு அதன் துவக்கத்திற்கான அறிவிப்பை நான் செய்தேன். அக்கம்பக்கத்திலுள்ள மக்கள் நகரத்தில் கட்டப்பட்டுள்ள நமது புதிய பள்ளிவாசலுக்கு அருகில் குடிபெயர்ந்துள்ள இந்துக்களும், கிறிஸ்தவர்களும் மிகவும் திறந்த உள்ளத்துடன் செயல்பட்டுள்ளார்கள். நான் பள்ளிவாசலை திறந்து வைப்பதற்காக வருவேன் என்பது தெரிந்ததும் தங்களது வீட்டின் நான்கு புறமுள்ள சுவர்களில் இந்த மக்கள் வண்ணம் தீட்டியிருந்தார்கள். அந்தப் பகுதி சுத்தமாக இருக்கும் விதத்தில் அதை பொலிவுடன் வைத்திருந்தார்கள். இந்த பள்ளிவாசல் நகரத்திற்குள் இருந்தாலும் ஏற்பாடுகள் சிறப்பாக இருந்தன. மக்களது ஒத்துழைப்பும் நல்ல விதமாக இருந்தது. மக்கள் வந்து செல்வதில் எந்த சிக்கலும் இருக்கவில்லை. மற்ற இடங்களில் மேலும் 4 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டிருந்தது தொடர்பாகவும் அங்கு என்னால் செல்ல முடியவில்லை என்பதைப் பற்றியும் நான் கூறியிருந்தேன். நான் அங்கு செல்ல முடியாமலிருப்பதை மக்களிடம் கூறியபோது அவர்கள் அதிகமாக அதை விரும்பியிருந்தும் எனது நிலைமை பற்றி அவர்கள் நன்றாக புரிந்து கொண்டார்கள். திறந்த உள்ளத்துடன் எவ்வித சலனமுமின்றி நான் கூறியதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். கொஞ்ச நேரம் அவர்களது முகங்கள் வாடிவிட்டாலும் நீங்கள் வழங்குகின்ற தீர்ப்பில்தான் அருள் இருக்கின்றது என்று அவர்கள் கூறினார்கள். கொச்சின் மிகப்பெரிய நகரமாகும். அங்குள்ள தேசிய பத்திரிகையான The Hindu -வின் Cheif Reporter -ம் என்னிடம் Interview எடுத்தார்.

இந்தியாவின் எல்லா பெரிய நகரங்களிலும் இந்த பத்திரிகை வெளிவருகின்றது. கோடிக்கணக்கான நபர்கள் படிக்கும் விதத்தில் இதன் Circulation இருக்கின்றது. பிறகு Indian Express என்ற பத்திரிகை இருக்கின்றது. இதுவும் எல்லா பெரிய நகரங்களிலிருந்தும் வெளி வருகின்றது. இதன் Circulation -ம் கோடிக்கணக்கில் இருக்கின்றது. இதன் மூத்த பிரதிநிதியும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியவாறு என்னிடம் Interview எடுத்தார். அவரிடமும் அஹ்மதிய்யத்தின் வாதங்கள் தொடர்பாகவும் அஹ்மதிகளுக்கும் அஹ்மதி அல்லாதவர்களுக்கும் இடையில் நிலவும் வித்தியாசங்கள் தொடர்பாகவும் உலக அமைதி தொடர்பான இஸ்லாத்தின் போதனைகள் பற்றியும் நான் எடுத்துக் கூறினேன். ஏறக்குறைய சில மணித்துளிகளுக்காக மட்டுமே அவர் என்னிடம் Interview எடுக்க வந்திருந்தார். ஆனால், ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் இந்த பத்திரிகையின் பிரதிநிதி என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். இதன் மூலமாக அல்லாஹ்வின் அருளால் மிக விரிவான நிலையில் அப்பகுதியில் வாழும் பல்வேறு துறையைச் சேர்ந்த மக்களுக்கும் அஹ்மதிய்யத்தைப் பற்றிய அறிமுகம் கிடைத்து விட்டது.

இரண்டு இடங்களிலும் (அதாவது Calicut -லும் கொச்சினிலும்) நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சிகளில் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் இருந்தார்கள். பேராசிரியர்களும், பொறியாளர்களும் கலந்து கொண்டார்கள். இந்தப் பகுதியின் எம்.பி. சிறப்பு விருந்தினராக வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இவர்களில் பெரும்பாலார் என்னிடம் எவ்வாறு நீங்கள் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துக் கூறுகின்றீர்களோ அதை பார்க்கும் போது உங்களால்தான் உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்பது தெரிய வருகிறது என்ற தங்களது கருத்தை வெளிப்படுத்தினார்கள். அங்குள்ள ஒரு Research Scholar சில

ஆலோசனைகளையும் எனக்கு எழுதி தந்துள்ளார்கள். சுருக்கமாக, உலகில் நன்மையை நிலைநாட்ட உங்களால்தான் ஏதாவது செய்ய முடியும் என்ற கருத்தையே அவர்கள் கூறியுள்ளார்கள்.

பொதுவாக மிகவும் நல்ல நிலையில் நல்விளைவை தரக்கூடியதாக இந்த பயணம் இருந்தது. தர்பிய்யத் ரீதியாக அஹ்மதிகளுக்கு மிகுந்த நற்பலன் கிடைத்துள்ளது. சிறுவர்கள், பெரியவரகள் எல்லோருக்கும் ஜமாஅத்துடனும் கிலாஃபத்துடனும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டுள்ளது. இப்போது கடிதங்கள் எழுதும் தொடரும் ஆரம்பித்து விட்டது. அதிலிருந்தும் எனது சுற்றுப்பயணம் அங்குள்ள ஜமாஅத்தில் ஒரு புதிய ஆன்மாவை ஊதியிருப்பது தெரிய வருகிறது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

காலத்தின் கலீஃபாவின் சுற்றுப்பயணம் தப்லீக் செய்வதற்காக இருக்காது. அவ்வாறு நாம் சிந்திக்கவும் கூடாது. மாறாக, அந்த இடங்களில் நேரடியாக அங்குள்ள நிலைமைகளை அறிந்து அங்கு நுட்பமான வழிமுறைகள் மூலம் தப்லீக் செய்வதற்கான புதிய நடவடிக்கைகள் பற்றி சிந்தனை செய்வதற்கே அந்த சுற்றுப்பயணம் இருக்கின்றது. இதனால் தப்லீகிற்கான சில சந்தர்ப்பங்களும் கிடைத்து விடுகிறது. தப்லீக் தொடர்ந்து செய்யப்பட வேண்டிய ஒரு செயலாகும். அதனை அங்கு வசிப்பவர்களால்தான் சிறந்த முறையில் தொடர்ந்து செய்து வர முடியும். முபல்லிக்மார்களுக்கும், ஜமாஅத் சகோதர்களுக்கும் எனது சுற்றுப்பயணம் மூலமாக அவர்கள் தப்லீகிற்கான புதிய வழிமுறைகளை கடைபிடிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதை நான் பார்த்துள்ளேன். ஆலோசனைகள் செய்யப்படும் நுட்பமான வழிகள் மூலம் ஞானத்துடன் செயல்பட சந்தர்ப்பம் கிடைக்கும். சுற்றுப்பயணம் மூலம் கிடைக்கும் இன்னொரு பலன் தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாக எந்த அளவு Coverage கிடைக்கின்றது என்றால் எதிர்ப்பின் சூழ்நிலையில் அல்லது சாதகமான சூழ்நிலையில் மக்களுக்கு ஜமாஅத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டு விடுகிறது. இதன் காரணமாக ஜமாஅத்திலுள்ள நபர்களும் ஜமாஅத் அமைப்பும் வேகமாக செயல்பட வேண்டியது வருகிறது. இவர்களின் காரணமாக தூங்குகின்ற அஹ்மதிகளுக்கு அல்லது சோம்பேறித்தனமாக செயல்படும் அஹ்மதிகளுக்கு விழிப்புணர்வுடன் செயல்படும் வாய்ப்பு கிடைக்கின்றது. கோடிக்கணக்கான வெளியீடுகளைக் கொண்ட பத்திரிகைகளில் ஜமாஅத் பற்றிய அறிமுகம் வந்து விட்டது. இந்த அறிமுகத்திலிருந்தும் ஜமாஅத் பலன்பெற வேண்டும். தப்லீக் மூலமாக உங்களிடம் ஏற்பட்டுள்ள உணர்வை ஒருபோதும் நீங்கள் தணிய விட்டு விடக்கூடாது. எதிர்ப்பு நிலவினாலும் விஷயங்களைக் கேட்க தயார் நிலையிலுள்ள கண்ணியமிக்க மக்களும் இருக்கத்தான் செய்வார்கள். தென்னிந்தியாவிலுள்ள ஜமாஅத்துகளின் வரலாறு மதத்துடன் ஒன்றியிருக்கின்றது. எனவே, சரியான வழிமுறைகளுடன் தப்லீக் பணி மேற்கொள்ளப்பட்டால் அல்லாஹ் சிறந்த நல் விளைவுகளை ஏற்படுத்துவான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது தூதுச் செய்தியை மக்களுக்கு எட்ட வைப்பது பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:**

பொது மக்களது காதுகள் வரை ஒருமுறை இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும். ஏனென்றால், பொதுமக்களில் ஒருபெரும் பகுதியினர் கர்வம் மற்றும் காழ்ப்புணர்ச்சி போன்றவை தங்களிடம் இல்லாதவர்களாக இருப்பார்கள். மவ்லவிகள் கூறுவதைக் கேட்பதால் மட்டுமே உண்மையிலிருந்தும் அவர்கள் விலகி நிற்கின்றார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உலகில் மூன்று விதமான மனிதர்கள் இருக்கின்றார்கள். பொதுமக்கள், நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த மக்கள், செல்வந்தர்கள் ஆகிய மூன்று விதமான மனிதர்கள் இருக்கின்றார்கள். பொதுவாக பொதுமக்கள் குறைவான புரியும் திறனைக் கொண்டவர்களாக இருப்பார்கள். அவர்களுக்குப் புரிய வைப்பது மிகவும் கடினமானதாகும். செல்வந்தர்களுக்கும் புரிய வைப்பதும் கடினமான பணியாகும். ஏனென்றால், அவர்கள் மென்மையான இயல்பை உடையவர்களாக இருப்பார்கள். அதனால் விரைவில் பயந்து விடுவார்கள்.

அவர்களிடம் இருக்கும் கர்வமும் பெருமையும் மேலும் அவர்களுக்கு தடையாக இருக்கின்றது. எனவே இவர்களுடன் பேசக்கூடியவர்கள் அவர்களது வழிமுறைக்கு ஏற்ப அவர்களிடம் பேச வேண்டும். சுருக்கமாக அதே சமயத்தில் கூற வேண்டிய கருத்தை முழுமையாக பிரதிபலிக்கும் வகையில் பேச வேண்டும்.

ஆனால் பொதுமக்களுக்கு தப்லீக் செய்வதற்காக நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகள் சாதாரண நடையில் எல்லோராலும் புரிந்து கொள்ள முடிகின்ற வகையில் அமைய வேண்டும்.

எஞ்சியிருப்பது நடுத்தர நிலையிலுள்ள மக்களாவர். அதிகமாக தப்லீக் செய்வதற்கு தகுதியுள்ளவர்களாக இந்த பிரிவைச் சார்ந்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் நாம் கூறுவதைப் புரிந்து கொள்வார்கள். அவர்களது இயல்பில் செல்வந்தர்களிடம் காணப்படும் கர்வம், தற்பெருமை, மென்மை ஆகியவை இருக்காது. எனவே, அவர்களுக்கு புரிய வைப்பது கடினமானதல்ல.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பிடுகின்ற நடுத்தர நிலையிலுள்ள மக்கள் நான் சென்ற பகுதிகளில் அதிகமாக இருக்கின்றார்கள். முஸ்லிம்களிடையே மவ்லவிகளுக்கு அஞ்சுபவர்கள் யாரும் இல்லை என்று கூறும் அளவில் இந்தப் பகுதி தூய்மையானதாக இருக்கின்றது. ஆனால், பாகிஸ்தானிலுள்ள நடுத்தர நிலையிலுள்ள மக்கள் விஷயங்களை கேட்க விரும்பாமல் இருப்பதற்கு ஒரு காரணம் மவ்லவிமார்கள் அவர்களை காஃபிர் என்று கூறி ஃபத்வா கொடுத்து விடுவார்களோ என்று அவர்கள் பயப்படுகின்றார்கள். ஆனால், இந்தப் பகுதியில் நிலைமை அப்படி இல்லை. எனவே எங்கு நிலம் நமக்கு சாதகமாக இருக்கின்றதோ அங்கு தூதுச் செய்தியை எட்ட வைக்க கண்டிப்பாக நாம் முயற்சி செய்ய வேண்டும். ஹிக்மத்துடன் செயல்பட்டவாறு கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நேர்வழி காட்ட வேண்டிய பணி முஹம்மதிய மஸீஹை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இருக்கின்றது. அல்லாஹ் மனத்தூய்மையுடனும் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் நாம் எல்லாரும் செயல்படுவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. நமது பணிகளில் அருள் செய்வானாக. ஹிக்மத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தியை பிறருக்கு எட்ட வைப்பதன் பக்கம் நமது கவனம் இருக்கட்டும். அதன் மூலம் நாம் உலகுக்கு இரட்சிப்பை வழங்கக்கூடியவர்களாக ஆக வேண்டும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 12.12.2008**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**